1995 மார்ச் 15]

On the other hand in adjacent Karnataka, Bivoltin varities are used. They are fetching very good yield and also high prices in the market. The weather conditions in Hosur and Thenkanikottai and adjoining Karnataka are the same. I would like to know whether the Government would come forward to introduce Bivoltin variety which has got a very good market and also yarn price.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பைவோல்டின் முறையைப் பற்றி நாம் கூட இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதற்காக இப்போது தனித் திட்டங்களும் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

12—

பெரணமல்லூர் பேரூராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

*38716—**திரு. ஆ. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சியில் இயங்கிவரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை பேரூராட்சியின் நான்கு சாலை சந்திப்பு (ஆரணி-வந்தவாசி, வாழபந்தல்) இடத்திற்கு மாற்றி, கட்டிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பெரணமல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் நிதி நிலைமை முன்னேற்றம் அடையும் தருவாயில் பேரூராட்சியின் நான்கு எல்லைகள் சந்திக்கும் இடத்தில், புறம்போக்கு நிலம் கிடைக்க வாய்ப்பு இருந்தால் நிலம் வாங்கி கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற திருவள்ளுவருடைய வாக்குக்கிணங்க தமிழகத்தைக்கட்டிக் காக்கும் காவல் தெய்வமாக விளங்கும் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் என்னுடைய தொகுதியில் உள்ள எல்லா கிராமங்களிலும் வளர்ச்சிப் பணிகளும், அடிப்படை வசதிகளும் நிறைவேற்ற பெற்று மக்கள் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஆகவே, அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் முதல் வணக்கத்தை நன்றியோடு கொண்டு வணங்குகிறேன். பெரணமல்லூர் தொகுதியில் பெரணமல்லூர் பேரூராட்சி தலைமையிடமாக விளங்குகிறது. பல ஆண்டுகளாக விற்பனைக் கூடம் இல்லாததால், ஒரு பகுதியிலிருந்து அரசுக்கு சாதகம் இல்லை என்றும், அதற்குக் கட்டிடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து பதில் அளித்த நிலையில் இன்றைக்கு இடம் கிடைத்தால் பரிசீலனைச் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். அதேசமயத்தில் அந்த எல்லையில் 4 பாதைகள் செல்லும் கூட்டுச் சாலை இருக்கிறது. அந்த இடத்தில் இடம் இருக்கிறது. அந்த இடத்தைத் தேர்வு செய்து கட்டிடம் கட்ட அமல் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய் பொருள் காண்ப தறிவு" (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற அடிப்படையிலே வள்ளுவப்பெருந்தகையின் வாக்குக்கிணங்க ஆட்சி நடத்தி வரும் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.